**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.NO. 121/2021 |
| Prosecution Witness | : | **அ.சா.** 2 |
| Name | : | **தனலெட்சுமி** |
| Husband Name | : | **அசோகன்** |
| Address | : | மேலபுலியூர், பெரம்பலூர். |
| Age | : | 55/2025 |

**தேதி : 11.02.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு காலை 8.00 மணி அளவில் ஏற்கெனவே எதிரிகளுக்கும், இடம் சம்மந்தமான பிரச்சனை இருந்து வந்ததால் அதனால் எங்கள் பாகத்தை பிரித்து தரும்படி கேட்டபோது ஆஜர் எதிரிகள் ஒன்றுகூடி எதிரி ராதாகிருஷ்ணன் மற்றும் அன்னலெட்சுமி கையாலும், கட்டையாலும் என்னையும், எனது மகன் பிரபாகரனையும், மகள் மேனகாவையும் அடித்து காயம் ஏற்படுத்தியுள்ளார். அதில் எனக்கு வலது பக்க தலையில் காயம் ஏற்பட்டது. எனது மகன் வலது பக்க கை முட்டியிலும், காலிலும்காயம் ஏற்பட்டது. எனது மகளுக்கு எதிரிகள்அடித்ததில் இடது பக்க மோதிர விரலில் காயம் ஏற்பட்டது. பின்னர் காயம்பட்ட நாங்கள் அரசு மருத்துவமனையில் ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தோம். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்கள். அதனால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.